# சங்ககால நடனத்தின் வழிதோன்றலில் நாட்டுப்புறவியலில் ஆடற்கலைகள்

# In the origin of Sangam-period dance the art of dance in folk

**ஆனந்தி க. ய.**

சோகா இகெதா கலை மற்றும் அறிவியல் மகளிர் கல்லூரி ,

சேது பாஸ்கரா நகர், மாதனாங்குப்பம் , கொளத்தூர் , சென்னை-99.

மின்னஞ்சல் : magizhviththu.vaazh@gmail.com

**Ananthi K Y. B.Sc.,B.Ed,M.Sc.,M.A (T)**
Soka Ikeda College of Arts and Science for Women
Sethu Bhaskara Nagar, Madhanangkuppam, Kolathur, Chennai-99.

**Abstract:**

The Tamils themselves are the ones who have defined this country by analyzing the tradition, cultural elements, civilization and performance of the Tamils. The antiquity and richness of an art is a mirror of time that reveals to us the richness and glory of the development of the civilization and culture of the country. The three Tamils, which are harmonious with the life of the Tamils, have evolved in many forms and have survived to this day. Among the arts that have been taught and experienced, the influences of dance education have led to the development of dance and a different life for the folk artists. The Sangam period dances have also influenced folk dance and contributed to the development of society and culture. The topic has been chosen in the context of the contribution of folk arts to social and cultural development.

**Keywords**: Koothu, drama, music, folk arts, dance inscriptions

**ஆய்வுச் சுருக்கம்**

தமிழர்களின் மரபையும் பண்பாட்டு கூறுகளையும் நாகரித்தையும் செயல்வடிவத்தையும் பகுத்தறிந்து இவ்வையகத்திற்கு வரையறைகளை எடுத்துரைத்தவர்கள் தமிழர்களே. ஒரு கலையின் பழமையும் வளமையும் அந்நாட்டின் நாகரிக மற்றும் கலாசாரத்தின் வளர்ச்சியின் செழிமையையும் பெருமையையும் நமக்கு வெளிப்படுத்தும் காலக்கண்ணாடியாக உள்ளது. தமிழர்களின் வாழ்வியலோடு இயைந்த முத்தமிழ் , பலவடிவங்களில் பரிணாமம் அடைந்து இன்றளவும் நிலைத்து இருப்பதற்கு ,பயிற்றுவிக்கப்பட்ட மற்றும் அனுபவத்தல் பயிலபட்ட கலைகளுள் ஆடற்கல்வியின் தாக்கங்கள் ஆடற்கலையின் வளர்ச்சிக்கும் நாட்டார் கலைஞர்களுக்கும் மாறுபட்ட வாழ்க்கைக்கு வழிவகுத்து இருப்பதையும் சங்ககால ஆடல்கள் நாட்டுப்புற ஆடற்கலையிலும் தாக்கங்களை தந்து சமுதாய மற்றும் பண்பாட்டு வளர்ச்சிக்கு நாட்டுப்புற கலைகளின் பங்களிப்பு என்ற பொருண்மையில் தலைப்பு தேர்வு செய்யப்பட்டுள்ளது.

**முக்கிய வார்த்தைகள்:**

கூத்து, நாடகம், இசை, நாட்டார் கலைகள், ஆடற்கலை கல்வெட்டுக்கள்.

**முன்னுரை**

ஒரு மொழியின் அடையாளமாக அம்மொழியின் செவ்வியலும் பண்பாட்டு கூறுகளையும் தொண்மைகள் பல கொண்டு தமிழர்களின் வாழ்வியலை இன்றளவும் தமிழன்னை தொய்வு கொள்ளாமல் செம்மொழியின் அங்கங்களாக இருக்கும் முத்தமிழின் ஒரு வடிவமான ஆடல்கலை நம்மோடு இயைந்தே பயணிக்கிறது.

**கலைகளின் தோற்றம்**

கலைகளைக் கவின்தரு கலை என்றும் பயன்தரு கலை என்றும் வகுத்துக் கூறுப்பட்டுள்ளது. கண்ணையும் செவியையும் கவர்ந்து அவற்றின் வாயிலாக மனதிற்கு இன்பம் ஊட்டும் கலை கவின்கலை. இக்கலையை அழகுக்கலை என்றும் நுண்கலை என்றும் அழைப்பர்.

இசை, நடனம்,நாடகம், கூத்து போன்றவை நிகழ்த்துக் கலைகளில் அடங்கும். இவை பயன்தரும் கலைகளாகவும் பார்க்கப்படுகிறது.

மக்களின் வாழ்க்கைக்குத் தேவையான பொருட்களை ஆக்கப் பயன்படும் கலைகள் பயன்தரு கலைகள் எனப்படும்.

பயன்தரு கலைகள், ஒரு நாட்டின் பண்பாடு மற்றும் கலாச்சாரத்தை பிரதிபலிக்கின்றன. இவை ஒரு நாட்டின் பொருளாதார நிலை, வாழ்க்கை முறை,பழக்கவழக்கங்கள் போன்றவற்றையும் வெளிப்படுத்துகின்றன.நம் முன்னோர்கள் கலைகளை அறுபத்து நான்காக வகுத்துள்ளனர்.

“ஆய கலைகள் அறுபத்து நான்கினையும்
ஏய உணர்விக்கும் என்னம்மை - தூய
—-----
கல்லுஞ்சொல் லாதோ கவி”1.

கம்பர் அருளிய சரசுவதி அந்தாதி-கடவுள் வாழ்த்து

**தொல்காப்பியர் கூறும் நாடகம்**

மையக் கருவான கதையுடன் நடிப்பு, ஒப்பனை, ஓவியம், திரை மற்றும் ஒலி, ஒளியுடன் ஒருங்கமைக்கப்பட்ட அரங்கமைப்புடன் இயலும் இசையும் சேர்ந்து படைக்கப்படுவது நாடகம் ஆகும். தொல்காப்பியர் மெய்ப்பாட்டியல் என்னும் பகுதியில் கூறியுள்ள பல செய்திகள் நாடகங்களுக்கு ஏற்ற கூறுகளாக உள்ளன. மேலும் தொல்காப்பியர் நாடகத்தை, விளையாட்டு எனப் பொருள்படும் பண்ணை என்ற சொல்லால் குறிப்பிடுகின்றார். இளம்பூரணனார் மெய்யின்கண் தோன்றுவதால் மெய்ப்பாடாயிற்று எனக்குறிப்பிடுவார். இதனைத் தொல்காப்பியம் சிரிப்பு, அழுகை, இழிப்பு, வியப்பு, அச்சம், வீரம், வெகுளி, காதல் என எட்டாகக் குறிப்பிடுகின்றது.

“நகையே அழுகை இளிவரல் மருட்கை
அச்சம் பெருமிதம் வெகுளி உவகை என்று

அப்பால் எட்டே மெய்ப்பாடு என்ப”

என எட்டாகக் அமையும் என்றும், மேலும்

“ஒப்பும் உருவும் வெறுப்பும் என்றா

கற்பும் ஏரும் எழிலும் என்றா

-----------

காட்டலாகாப் பொருள் என்ப “..

என்ற பாடல் "ஒப்பும், உருவும், வெறுப்பும்" என்ற சொற்றொடர், தொல்காப்பியம், பொருளியல் பகுதியில் இடம்பெறும் ஒரு கூற்றாகும். இது "ஒப்புமை, தோற்றம், வெறுப்பு" போன்ற உணர்ச்சிகளையும், "கற்பு, வீரம், அழகு" போன்ற தன்மைகளையும், "சாயல், வெட்கம், மடம்" போன்ற பண்புகளையும், "நோய், ஆசை, நுகர்ச்சி" போன்ற உணர்வுகளையும் குறிக்கும் சொற்களைத் தொடர்ந்து வரும் ஒரு வினாவாக வருகிறது. இந்த சொற்கள் அனைத்தும் மனதின் உள் உணர்வுகளையும், வெளிப்பாடுகளையும் குறிக்கின்றன. அவை நாட்டிய மரபின் படி, ஒருவரின் மனதிற்குள் உணரப்பட வேண்டுமே ஒழிய, வெளிப்படையாகக் காட்டப்பட முடியாதவை என்று கூறப்படுகிறது.

“நாடக வழக்கினும் உலகியல் வழக்கினும்

பாடல் சான்ற புலனெறி வழக்கம்

கலியே பரிபாட்டு ஆயிரு பாவினும்

உரியதாகும் என்மனார் புலவர்”

எனும் நூற்பாவின் மூலம் இதனைத் தெளிவாகப் புரிந்து கொள்ள முடிகின்றது. நாடகத்தில் மிகப் பழைய காலந்தொட்டே ஆடல் வகையையும், பின்னர்க் கதை தழுவி வருவதையும் “கூவி யாடல் கூத்தெனப் பெறுமே / நாடுறுஞ் சுவையின் நாடக மாமே”2 என அரனரங்கத்தொகை காட்டுகின்றது.

நாடகம், என்பது நள் என்னும் பகுதியடியாகப் பிறந்த தொழிற்பெயர் என நுண்மாண் நுழைபுல எழிலர் பாவாணர், நாடகம் எனும் சொல்லிற்கு விளக்கம் தந்து, நடி + அகம் = நாடகம் என அச்சொல்லைப் பிரித்துப் பொருளுணர்த்தி நிலைப்படுத்துகிறார்.

“வெறியறி சிறப்பின் வெவ்வாய் வேலன்

வெறியாட்டு அயர்ந்த காந்தளும் உறுபகை

வேந்திடை திரிதல் வேண்டி………”

தொல். பொருள். 60

தொல்காப்பியர் வெறி ஆடலின்3 புறமரபுக்குரிய இலக்கணத்தை புறத்திணையியல் ‘வலுஏழ் ஆவண இன்னும்’ தலைப்பின் கீழ், 21 வகையான நிலைகளை எடுத்துரைப்பதோடு ,வெறி அயர்ந்த வேலன் காந்தன் பூவை சூடிக்கொண்டு ஆடிய கூத்தை பற்றி விளக்கியுள்ளார்.

தொல்காப்பியர் காலத்தை ஒட்டி முன்னும், பின்னும் சில நாடக நூல்கள் இருந்தன. அவை பற்றி உரையாசிரியர்கள் எழுதிய உரைகளின் மூலம் அறிகிறோம். அவ்வாறான நூல்களில் பன்னிரண்டு

நூல் முக்கியமானவை. இவற்றுல் கூத்த நூல், பஞ்ச மரபு மூலமே பல தகவல்களை அறிய முடிகிறது. அவை,

(1) முறுவல், (2) சயந்தம் , (3) குணநூல், (4) செயிற்றியம், (5) இசை நுணுக்கம் (6) இந்திரகாளியம், (7) பஞ்சமரபு, (8) பரதசேனாபதீயம், (9) மதிவாணர் நாடகத் தமிழ் நூல், (10) கூத்த நூல், (11) செயன் முறை, (12) நூல் என்பனவாகும்.

**சங்க காலத்தில் நாடகம்**

தொல்காப்பியர் கூறிய நாடகங்கள் (கூத்துகள்), அவற்றின் வகைகள் பற்றிச் சங்க இலக்கியங்களில் இடம்பெற்றறுள்ளது. பாணரும், பாடினியும் இசைக் கலையை வளர்த்தனர். பொருநரும், கூத்தரும் நாடகக் கலையைப் போற்றி வளர்த்தனர்.

“கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்…..”4

என்ற பாடலும், அகநானூறு, குறுந்தொகை, நற்றிணை ஆகியவற்றில் வரும் பாடல்கள் நாடக உரையாடல்கள் போலவும் இவ்வுரையாடல்கள் தலைவன் - தலைவி, தலைவி - தோழி, தோழி - பாணன் இடையே நடந்ததை நாடக வடிவமாகவே இருந்துள்ளது.

வெறியாட்டு என்ற ஆடல் பற்றி சங்க இலக்கியத்தில், இதனை சடங்கு நிகழ்ச்சியாக விளங்குகிறது. காதல் வயப்பட்ட மகள், தாய், வேலன், தோழி என நான்கு பேருக்கும் இடையில் நடைபெறுகின்ற ‘உரையாடல்’ நாடக மொழிகளாகவே அமைந்துள்ளதை அறிய முடிகிறது.

சங்க இலக்கியத்தில் கூத்தோடு சம்பந்தப்பட்டவர்களாகக் கோடியர், வயிரியர், கண்ணுளர், பாணர், அகவுநர் என்ற தொழில்முறைக் கலைஞர்களாக காட்சிபடுத்தப்பட்டுவுள்ளனர். பத்துப்பாட்டு நூலான மலைபடுகடாம் எனும் நூலில் கூத்தர்களுக்கு ஆற்றுப்படுத்துத்தியதை கூறுகிறது. .

“புறஞ்சிறை மாக்கட் கறங்குறித் தகத்தோர்

-----------

அதனால், அறனும் பொருளு மின்பமு மூன்றும் “

புறநானூறு, பாடல் (28) கூத்தர் ஆடுகளத்தை5 பற்றியும்,

“தத்தரிக் கண்ணார் தலைத்தலை வருமே
செறுவே, விடுமலர் சுமந்து பூநீர் நிறைதலிற்
படுக ணிமிழ்கொளை பயின்றன ராடும்
களிநா எரங்கி னணிநலம் புரையும்
காவே, சுரும்பிமிர் தாதொடு தலைத்தலை மிகூஉ “
(பரிபாடல், பாடல் 16.12-13)

என்ற அடிகள் ஆடல் அரங்குகளைப்6 பற்றிக் கூறுகின்றன.

கடைச் சங்க காலத்து நாடகத் தமிழ் நூல்கள் பல மறைந்துவிட்டன. சயந்தம், செயிற்றியம், முறுவல், மதிவாணர் நாடகத் தமிழ் நூல் விளக்கத்தார் கூத்து, செயன்முறை, குணநூல் நன்நூல கூத்த நூல் என்னும்

பெயர்களை மட்டுமே அறிய முடிகின்றது. அவை அனைத்துமே நாட்டியம் பற்றியும், நாடகம் பற்றியும் இலக்கண முறையில் விளக்கம் கூறும் நூல்கள் ஆகும். சிலப்பதிகார உரையாசிரியர் அடியார்க்கு நல்லார், அவர் தரும் உரை விளக்கங்களில் செயிற்றியம், மதிவாணர் நாடகத் தமிழ் நூல்களை மேற்கோள் காட்டுவதால் அத்தகைய நூல்கள் அவர் காலத்தில் இருந்துள்ளன என்பதை உறுதி செய்ய முடிகின்றது. கூத்த நூல் என்னும் பெயருடைய நாடகத் தமிழ் இலக்கண நூல் பழைய ஏட்டுச் சுவடியிலிருந்து எடுக்கப்பட்டுள்ளதையும், கடைச் சங்க காலத்து அறிவனார் இயற்றியுள்ள பஞ்சமரபு என்னும் நூல் அச்சிடப்பட்டுள்ளதால் இவற்றின் பெருமையை அறிய முடிகிறது..

**நடனக்கலையின் பல பரிணாமங்கள்**

மனித இனம் நாடோடியாக வாழ்ந்த காலத்தில் இருந்தே தங்கள் உணர்வுகளை நடனத்துடன் வெளிப்படுத்தி உள்ளனர்.இதனை நடனக்கலை ஆடற்கலை, கூத்துக்கலை என்றும் பலவாறு அழைக்கப்பட்டது.

- "இசையும் கூத்தும் எல்லாராலும் கையாளதக்க கலை அல்ல. பழங்காலத்தில் சிறுபாணர் பெரும்பாணர் இசைப்பாணர் யாழ்ப்பாணர் என இசைவாணர் வகையினரும், பறையர் துடியர் இணைஞர் வயிரியர் என்னும் கருவிசையாளர் வகையினரும் அவரவர் கலைகளை வாழ்க்கைத் தொழிலாகக் கொண்டு வாழ்ந்துள்ளனர்."7
- தாளத்துக்கும் இசைக்கும் ஒத்திசைவாக உடலை நகர்த்தும் கலை வடிவமே நடனம் ஆகும் . புராணங்கள் இதிகாசங்கள் காப்பியங்கள் இலக்கியங்கள் கூறும் கதைகளையும் , வரலாற்று நிகழ்வுகள், சமூக நிகழ்வுகள், காதல் போன்றவற்றை உள்ளத்தில் எழும் உணர்ச்சிகளை உடல் அசைவுகள் மூலம் உணர்த்தும் கலை ஆகும். இக்கலை பின்னாட்களில் பல வடிவங்களாக மாறுதல் அடைந்து இன்று பரத ஆடலில் இருந்து மாறுபட்டு ஒரு ஆடலுக்கென்றே ஒரு வழக்கை பின்பற்றி நிகழ்த்துப்படும் கரகாட்டம், தப்பாட்டம், ஒயிலாட்டம், மயிலாட்டம், காவடியாட்டம், பொய்க்கால் குதிரை ஆட்டம், சிலம்பாட்டம் முதலியன கிராமியக் கலைகள் அல்லது நாட்டுப்புற கலைகளாக மக்களை மகழ்விக்க ஆடப்படுகிறது.

**பரதமும் நாட்டார் நடனமும்**

நாட்டுப்புற நடனக் கலைஞர்கள் (அடிப்படையில் கிராமவாசிகள் அல்லது பழங்குடி மக்கள்) ஒரு குழுவை உருவாக்கி, தங்கள் திறமையை ஆடலின் முலம் வெளிப்படுத்த வெவ்வேறு இடங்களுக்குச் செல்கிறார்கள். தமிழ்க் கூத்து இன்று பரத நாட்டியம் என்ற பெயரால் வழங்கப்பெறுகின்றது. பாவம், இராகம், தாளம் என்ற சொற்களின் முதல் எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து "பரதம்" ஆகியது என்றும் சொல்கிறார்கள்.

- பரதநாட்டியம் என்பது தமிழ்நாட்டின் பாரம்பரிய நடனமாகும், நடனம் என்பது அழகுற ஆடுவது. அது நூற்றெட்டு உடற் கரணங்களோடும், கை, கால், கண், வாய் முதலிய உறுப்புகளின்

தொழில்களோடும் கூடியது. தமிழ்க் கூத்து இன்று பரத நாட்டியம் என்ற பெயரால் வழங்கப் பெறுகின்றது. பாவம், இராகம், தாளம் என்ற சொற்களின் முதல் எழுத்துக்கள் ஒன்று சேர்ந்து "பரதம்" ஆகியது என்று சொல்கிறார்கள். பரதம், நாட்டியம், நிருத்தம், நிருத்தியம் என்று மூன்று பிரிவுகளைக் கொண்டது. பாவ இராக தாள சேர்க்கையில் பரதம் அல்லது கூத்துப் பிறக்கிறது. இந்த மூன்று சொற்களும் நாட்டியத்தின் முக்கிய கூறுகளாகும்.8

- பாவம் என்பது கை, கால், தலை, உடல், இடை மற்றும் இதழ்கள் போன்றவற்றின் அசைவுகளால் மனதில் உண்டாகும் இன்ப துன்பங்களை (எண்பான்சுவைகளை) நடித்துக் காண்பிப்பதாகும். தமிழ் இலக்கியங்களில் நடனம் கூத்து, ஆடல், நடம், நிருத்தம் என குறிக்கின்றனர். பிற்காலத்தில் இதனை சதிர் என்றும் சின்னமேளம் என்றும் அழைத்தார்கள்.
- "நாடகத் தமிழ் நூலாகிய பரதம் அகத்திய முதலாவுள்ள தொன்னுல்களுமிறந்தன" என்ற சிலப்பதிகார பாயிரத்தின் மூலம் அடியார்க்கு நல்லார் வடமொழியின் பரத சாத்திரத்திற்கு முந்தியது, அகத்தியரால் எழுதப்பட்ட பரதம் என்ற நூலே என்று நிலை நிறுத்துகிறார்9.

இது முக்கியமாக பெண்களால் நிகழ்த்தப்படுகிறது. இது இந்தியாவின் பழமையான நடன வடிவமாகவும், மற்ற அனைத்தும் பாரம்பரிய நடன பாணிகளின் தாயாகவும் கருதப்படுகிறது. கலாச்சார ரீதியாக வேரூன்றி வளர்ச்சி அடைந்து உலகமெங்கும் பரவி காணப்படுகிறது.

ஆனால் கிராமிய மற்றும் நாட்டுபுற நடனங்கள் ஒரு பகுதியில் வாழ்பவர்களாலும் அல்லது சில குறிப்பிட்ட இனக்குழுக்களாலும் ஆடும் ஆடலாக இருப்பதால் இதன் வளர்ச்சி பரதத்தை காட்டிலும் குன்றிய நிலையிலேயே உள்ளது என்பதே உண்மை.

**நாட்டுப்புற இலக்கியங்கள்**

இலக்கியத்தின் சுவையைக் கருத்தால் மட்டுமே உணரமுடியும். இலக்கியத்தின் வரலாற்றை இலக்கியத்தின் படைப்பாளனோடும் படைப்பையும் இணைத்தே பார்க்க வேண்டியுள்ளது.

•" தலைமை வாய்ந்த இலக்கிய வரலாறுகள் பலவும் நாகரிகப் பண்பாட்டு வரலாறுகளாகவோ (அ) திறனாய்வுக் கட்டுரைகளின் தொகுதிகளாகவோ உள்ளன" என்று ரெனி வெல்லாக் தமது நூலில் கூறியுள்ளார் என்பது குறிப்பிடதக்கது.

•"நாட்டுப்புற இலக்கியத்தின் வேர்கள் மனித சமுதாயத்தில் மிக ஆழமாகப் பதிந்துள்ளன. நாட்டுப்புற இலக்கியமானது மனித சமுதாயம் எதை அனுபவித்ததோ, எதைக் கற்றதோ அதைக் குவித்து வைத்திருக்கும் சேமிப்பு அறையாகும்" என்கிறார் முனைவர் சு.சக்திவேல் கூறியுள்ளது குறிப்பிடதக்கது எனவே நாட்டுப்புற இலக்கியம் மண்ணின் மணத்தைப் பரப்பும் சிறப்பினைக் கொண்டது. நாட்டுப்புற இலக்கியம் பல்வேறு வகையின் கீழ் பிரிக்கப்படுகிறது அவை

1) நாட்டுப்புறப் பாடல்கள்
2) நாட்டுப்புறக் கதைகள்

3) நாட்டுப்புறக் கதைப்பாடல்கள்

4) நாட்டுப்புறப் பழமொழிகள்

5) விடுகதைகள்

6) புராணங்கள்

**நாட்டுப்புற நடனங்களில் சங்க கால நடனங்களின் தாக்கம்**

சங்க கால நடனங்களில் உள்ள இசையும், அடவுகளும், நடன அமைப்புகளும் நாட்டுப்புற நடனங்களில் பிரதிபலிக்கின்றன. கருப்பொருள்கள் மற்றும் பாடல்கள், நாட்டுப்புற நடனங்களில் கதை சொல்லும் அம்சமாக பயன்படுத்தப்படுகின்றன.

- சங்க இலக்கியங்களில் உள்ள நடன வடிவங்கள், நாட்டுப்புற நடனங்களின் தோற்றத்திற்கும், வளர்ச்சிக்கும் ஆதாரமாக உள்ளன. நாட்டுப்புற நடனங்கள், சங்க கால நடனங்களின் தொடர்ச்சியாகவும், சமூதாயத்தின் கலாச்சார வெளிப்பாடாகவும் கருதப்படுகின்றன.
- சங்ககால நடனமான குரவைக் கூத்து ,இன்று நாட்டுப்புற நடனங்களான ஆடப்படும் கும்மியாட்டம் மற்றும் கோலாட்டத்திற்கு முன்னோடியாகவும், துணுங்கைக் கூத்து கும்மியாட்டமாகவும், பறை ஆட்டம் ஆட்டமானது பிற்காலத்தில் தப்பாட்டமாக உருவானது. தப்பாட்டம் என்பது ஒரு நாட்டுப்புற நடனமாகும். இது பறை இசையுடன் ஆடப்படுகிறது. சிலப்பதிகாரத்தில் குடக்கூத்து பற்றிய குறிப்புகள் உள்ளன. இது கரகாட்டத்திற்கு முன்னோடியாக கருதப்படுகிறது, ஏனெனில் கரகாட்டம் குடத்தை தலையில் வைத்து ஆடும் நடனமாகும்.

**நடன கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட கொடைகள் பற்றிய கல்வெட்டுச் சான்றுகள்**

திருவாரூர் கல்வெட்டுகள்12,தஞ்சாவூர் பெரிய கோயில் கல்வெட்டு,மதுரை மீனாட்சி அம்மன் கோயில் கல்வெட்டு நடன கலைஞர்களுக்கு அளிக்கப்பட்ட தானங்களை பற்றி விளக்குகிறது .இக்கல்வெட்டுகள் தமிழ்நாட்டின் நடன மரபுகளைப் பாதுகாக்கவும், நடனக் கலைஞர்களின் பங்களிப்பை அங்கீகரிக்கவும் உதவுகின்றன. மேலும், நடனம் மற்றும் இசை பற்றிய பண்டைய கால மக்களின் நம்பிக்கைகள் மற்றும் கலாச்சாரத்தை புரிந்துகொள்ளவும் உதவுகின்றன.

**நாட்டுபுற கலைஞர்களின் வாழ்வியல்**

நடன கலைஞர்களின் வாழ்க்கையில் அங்கமாகி போன நடனமும் அதன்மீது கொண்ட அர்ப்பணிப்பும் தீரதா பக்தியும் கலைஞர்களை அக்கலை வாழ்வியலை நோக்கி நகரச்செய்கிறது. பழங்கால மரபுகளை தங்களின் கதைகளிலும், ஆடல்களிலும் வெளிப்படுத்தி மக்களை மகிழ்விக்கும் பணியை நாட்டுப்புறகலைஞர்கள் மேற்கொள்கிறார்கள். மேலும் கலைஞர்களின் திறனை வெளிபடுத்திடவும் கலாச்சாரத்தை மேம்படுத்திடவும் இக்கலையை சமுதாய ஒற்றுமைக்காகவும்

கலாச்சார புரிதலை அடுத்த தலைமுறைக்கு கொண்டு செல்ல வசனம், நடிப்பு, இசை, நடனம் வாய்ப்பாட்டு போன்றவைகளை கூத்து என்ற நடனகலை மரபைக் கலைஞர் பின்பற்றுகிறார்கள்.

- ஆடல் கலைஞர்களின் வாழ்வியலை பற்றிய இலக்கியங்களும் இலக்கணங்களும் போற்றப்படினும் பல சமயங்களில் வாழ்வியலுக்கான ஆதரவு அற்றவர்களாகவே, இக்கலைஞர்களை காலம் மாற்றி அமைத்துள்ளது .சங்க காலம் கூறும் ஆடல் கலைஞர்கள் மாமன்னர்களால் போற்றி பேணிக்காக்கப்பட்டனர் என்பது வரலாறு . மன்னர்களின் பெருமைகளை ஆடல் பாடல்கள் மூலம் குடிமக்களிடம் கொண்டு சென்றனர். பின்னர் அரசவையில் ஆடல் நிகழ்த்தப்பட்டு தலைக்கோல் பட்டம் பெற்ற நடன கலைஞர்கள் இறந்தமையை பல இலக்கியங்களிலும் காப்பியங்களிலும் புராணங்களிலும் கூறப்பட்டுள்ளது.

**நாட்டார் நடனத்தின் வளர்ச்சி**

கூத்துயென்றே அறியப்பட்ட நடனம் , இவ்வுலகு தோன்றிய காலமுதலே மனித வாழ்க்கையில் இயைந்ததோடு, சங்க இலக்கிய பாடல்களில் அறியப்பட்டதற்கு பின்னர் மூவேந்தர்களும் போற்றி வளர்திட்ட கலையாகவே இருந்துள்ளது. பின் தோன்றிய பல்லவர்கள் காலத்தில் மாமண்டூர்க் கல்வெட்டில் குறிக்கப்படும் மகேந்திரவர்ம பல்லவன் இயற்றிய மத்த விலாச பிரகடனம் என்ற சமஸ்கிருத நாடக நூலில் ஆடலைப் பற்றிய குறிப்புகள் விவரிக்கப்பட்டுள்ளது. சிறந்த இசைப்புலவனாக வாழ்ந்த மகேந்திர பல்லவன் ‘சங்கீர்ணஜாதி‘ எனும் இசைப் பண்ணைத் தானே அமைத்துச் சிறப்பெய்தினான். ஒப்பற்ற கவியாகவும் விளங்கினான் என்பதையும் அறியமுடிகிறது.13. . பல்லவர் காலத்தில் ஆடல் மகளிர் கோயிலில் வைத்து பேணும் பண்பு தொடங்கியது.

- பல நூற்றாண்டுகள் கடந்து, நடனங்கள், பலகிளை நடனங்களாக வடிவம் கொண்டன.இது பாரம்பரிய நடனம் மற்றும் பாமர மக்களுக்கான நாட்டுப்புற நடனமானது. இந்த நடினங்கள் பெரும்பாலும் சமயம் சார்ந்ததாகவும் , சடங்குகள், திருவிழாக்கள் மற்றும் சமூகக் கொண்டாட்டங்களின் சார்ந்ததாகவும் இருந்தன. கால மாற்றத்தால் நாட்டுப்புற நடனங்கள் ஒரு சமூகத்தின் நம்பிக்கைகள், பழக்கவழக்கங்கள் மற்றும் வாழ்க்கை முறைகளை வெளிப்படுத்துபவையாகவும் , தொழில்நுட்ப வளர்ச்சியின் காரணமாக இக்கலை சார்ந்த கல்வி வழங்கப்டுவதால் ஒரு சமுதாயத்தின் பாரம்பரியத்தை மக்களிடம் கொண்டு செல்ல உதவுகிறது. கலாச்சார பாரம்பரியம், சமூக ஒற்றுமை, உடல் மற்றும் மன ஆரோக்கியம்,நாட்டுப்புற நடனங்கள், ஒருவரது கலைத்திறனையும், படைப்பாற்றலையும் வெளிப்படுத்த ஒரு வழியாக உள்ளது.கலாச்சாரத்தைப் பற்றிய புரிதலையும் ஏற்படுத்துகிறது.

**முடிவுரை**

தமிழர்களின் பண்பாட்டையும் நாகரிக வாழ்விற்கு தங்களை ஆட்படுத்திக் கொண்டு வளர்த்த கலைகளின் சிறப்பையும் திறமையையும் கலைகள் எடுத்துக்கூறுகின்றன. நமது பண்பாட்டையும்

நாகரிகத்தின் தாக்கங்களையும் அறிந்திட பல தொல்லியியல் ஆய்வுகள் மூலமும் நாட்டுப்புற கலைஞர்களின் பங்களிப்பும் மிக முக்கியமானதாக அமைகிறது. கலையையே சார்ந்து வாழும் நாட்டுப்புற கலைஞர்களின் வாழ்க்கையை மேம்படுத்துவதற்கு கலைகளை ஊக்குவித்தது காத்தல் நம் அனைவரின் கடமையாகும்.

**துணைநூற் பட்டியல்**


1. கம்பநாட்டாழ்வார் அருளியற்றிய சரஸ்வதியந்தாதி,. வை.மு சடகோபராமானுஜச்சாரியரும் சே. கிருஷ்ணமாச்சாரியரும், கணேச அச்சுக்கூடம், சென்னை.
2. பஞ்சமரபு இரண்டாம் பகுதி, பாயிரம் ப.9.
3. தொல்காப்பியம் பொருள் அதிகாரம், உரையாசிரியர்
4. நச்சினார்க்கினியார் சாரதா பதிப்பகம், முதல் பதிப்பு. 2018.
5. சா வே சுப்பிரமணியன் தொல்காப்பியம் தெளிவுரை, பக்.400
6. புறநானூறு மூலமும் உரையும், ப. 42 புலியூர் தேசிகன், சாரதா
7. பதிப்பகம், சென்னை. 2010
8. எட்டுத்தொகையில் ஐந்தாகிய பரிபாடல் மூலமும் பரிமேலழகர்
9. உரையும், ப.170, டாக்டர் உ வே சாமிநாத ஐயர் நூல் நிலையம்
10. சென்னை.1980
11. திருமதி ஞானகுலேந்திரன், பழந்தமிழர் ஆடலில் இசை, தஞ்சாவூர்
12. தமிழ்ப் பல்கலைக்கழகம் 1990, ப.20
13. https://nakkeran.com/index.php/2018/11/24/art-of-bharatham/
14. தேவநேயம், பண்டைய தமிழ் நாகரிகம், ப.1
15. முனைவர் சு.சக்திவேல்,நாட்டுப்புற இயல் ஆய்வு, ப.22.
16. நாட்டுப்புறவியல், மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்.
17. எம். சுப்புலட்சுமி ,பரவை நங்கை ஈசுவரம், பரவைபுரம்/
18. பனையவரம், 2020.
19. https://www.tamilvu.org/courses/diploma/a031/a0314/html/a0314222.htm



License

This work is licensed under a Creative Commons Attribution 4.0 International License.
Our journal adopts CC BY License Creative Commons Attribution 4.0 International License http://Creativecommons.org//license/by/4.0/ . It allows using, reusing, distributing and reproducing of the original work with proper citation.